ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

ऐश्वर्यस्य विभूषणं सुजनता शौर्यस्य वाक्संयमः
ज्ञानस्योपशमः श्रुतस्य विनयो वित्तस्य पात्रे व्ययः ।
अक्रोधस्तपसः क्षमा प्रभवितुर्धर्मस्य निर्व्याजता
सर्वेषामपि सर्वकारणमिदं शीलं परं भूषणम् ॥ नीतिशतके ।

ஐச்வர்யஸ்ய விபூஷணம் ஸுஜநதா சௌர்யஸ்ய வாக்ஸம்யம: ஜ்ஞாநஸ்யோபசம: ச்ருதஸ்ய விநயோ வித்தஸ்ய பாத்ரே வ்யய: । அக்ரோதஸ்தபஸ: க்ஷமா ப்ரபவிதுர்தர்மஸ்ய நிர்வ்யாஜதா ஸர்வேஷாமபி ஸர்வகாரணமிதம் சீலம் பரம் பூஷணம் ॥ நீதிசதகே ।

ஒருவனுக்கு மிகுந்த ஐசுவர்யப்பெருக்கிருப்பின் பலராலும் போற்றக்கூடிய நற்குணங்களோடு விளங்குவதே அவனுக்கலங்காரமாகும். அதிக பலமிருந்தால் அடக்கமான வாக்குடனிருப்பதே பூஷணமாகும். சிறந்த ஞானத்தையடைந்தால் பொறுமையுடனிருப்பதே பெருமையாகும். சாஸ்திரங்களில் நன்கு பயிற்சி ஏற்பட்டால் கர்வத்தையடையாமல் வணக்கத்துடனிருப்பதே மேன்மையாகும். அதிகமான செல்வத்தைப் பெற்றிருந்தால் கெட்டவழிகளில் சிலவிடாமல் நல்ல பாத்திரத்தில் கொடுப்பதே சாலவும் நன்று. தவத்தில் விசேஷமான ஸித்தியையடைந்திருந்தால் கோபமில்லாமல் சாந்தஸ்வபாவத்துடனிருக்க வேண்டும். எதையும் செய்யக்கூடிய சக்தியையுடைய பிரபுவிற்கு க்ஷமை பூஷணமாகும். தர்ம்மத்தை யனுஷ்டிக்க முன்வருகிறவர்களுக்கு கபடமில்லாமல் அனுஷ்டிப்பதே பயனைக்கொடுக்கும். இவைகள் யாவற்றிற்கும் இயற்கையில் அவரவர்களுக்குள்ள நல்ல ஸ்வபாவமே முக்கிய காரணமாகும். ஆகையால் மனிதர்களுக்கு எப்பொழுதும் நன்னடக்கையில் பற்றுதலுள்ள ஸ்வபாவமே சிறந்த அலங்காரமாகும். அதைப்பெறவே நாம் முயலவேண்டும்!.

உபபத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

பிரபவஹூ வைகாசி-மீ ௨௭௨


## ஆத்மாநாத்ம விவேகம்.

(௨௯௨-வது பக்கத்தொடர்ச்சி)

சிஷ்:—காரணசரீரமென்றால் என்ன?

குரு:—இரண்டு சரீரத்துக்குக் காரணமாயும் ஆதியற்றதும் இவ்விதம் என்று கூறவியலாததும், ஆபாஸத்தோடு கூடியதும் ப்ரும்மமும் ஆத்மாவும் ஒன்றுதான் என்கிற ஞானத்திற்கு இடையூறாயும் இருக்கும் அக்ஞானமானது காரணசரீரம் எனப்படுகின்றது. இந்த அபிப்பிராயத்தையே

अनाद्यविद्याऽनिर्वाच्या कारणोपाधिरुच्यते ।
उपाधित्रितयादन्यमात्मानमवधारयेत् ॥

𑌅𑌨𑌾𑌦𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌽𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌚𑍍𑌯𑌾 𑌕𑌾𑌰𑌣𑍋𑌪𑌾𑌧𑌿𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌉𑌪𑌾𑌧𑌿𑌤𑍍𑌰𑌿𑌤𑌯𑌾𑌦𑌨𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌵𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥

இதனால் அறிவித்திருக்கிறார்.

சிஷ்:—முன் அநாத்மாவிற்கு இலக்கணம் கூறுமிடத்து அன்ருத ஜட துக்கஸ்வரூபமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அங்கு அன்ருதம் என்றால் என்ன?

குரு:—முக்காலத்திலுமில்லாததான வஸ்துவை அன்ருதமென்று கூறுவார்கள்.

சிஷ்:—ஜடமென்றால் என்ன?

குரு:—தான் தன்னுடையது, பிறருடையது என்கிற பகுத்தறிவற்ற வஸ்து ஜடமெனப்படுகின்றது.

சிஷ்:—துக்கமென்றால் என்ன?

குரு:—நமக்கு பிரியமில்லாத வஸ்து துக்கமெனப்படுகின்றது.

சிஷ்:—பின்னும் ஸமஷ்டி வியஷ்டியாத்மகமென்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஸமஷ்டி என்றால் என்ன? வியஷ்டி என்றால் என்ன?

குரு:—எங்ஙனம் வனத்திற்கு ஸமஷ்டி என்றும் அதிலுள்ள விருக்ஷத்திற்கு வியஷ்டி என்றும் கடலுக்கு ஸமஷ்டி என்றும் ஜலத்திற்கு வியஷ்டி என்றும் கூறப்படுகின்றதோ அவ்விதம் அநேக சரீரங்களுக்கு ஸமஷ்டியென்றும் ஏகசரீரத்துக்கு வியஷ்டியென்றும் பெயர்.

சிஷ்:—அவஸ்தாத்ரயம் என்றால் என்ன;

குரு:—ஜாக்ரதவஸ்தை, ஸ்வப்பனுவஸ்தை, சுஷுப்தியவஸ்தை என்கிற இம்மூன்றேயாகும்.

சிஷ்:—ஜாகரணம் என்றால் என்ன?

குரு:—இந்திரியங்களால் அந்தந்த அர்த்தங்களை அடைவது ஜாகரணமாகும்.

சிஷ்:—ஸ்வப்பனமென்றாலென்ன?

குரு:—ஜாகரணுவஸ்தையில் அனுபவிக்கப்பட்ட விஷயங்களின் ஸமஸ்காரத்தாலுண்டான அந்தந்த விஷயங்களோடு கூடின ஞானத்திற்கு ஸ்வப்பனுவஸ்தை என்று பெயர்.

சிஷ்:—சுஷுப்தி என்றால் என்ன?

குரு:—ஸகல விஷயங்களின் ஞானமும் அற்றதான அவஸ்தைக்கு சுஷுப்தி என்று பெயர். இங்கு கூறப்பட்டவைகளில் ஜாக்ரத்ஸ்தூலசரீர அபிமானிக்கு விசுவன் என்று பெயர். ஸ்வப்பன சூக்ஷ்மசரீர அபிமானிக்குத் தைஜஸன் என்று பெயர். ஸுஷுப்தி காரண சரீர அபிமானிக்குப் பிராக்ஞன் என்று பெயர்.

சிஷ்:—கோசபஞ்சகமென்றால் என்ன?

குரு:—அன்னமய, பிராணமய, மனோமய, விக்ஞானமய, ஆனந்தமய என்று பெயர் கொண்ட இவ்வைந்துகளும் பஞ்சகோசமெனப்படும்.

சிஷ்:—அன்னமயகோசமென்றால் எது?

पितृभुक्तान्नजाद्वीर्याज्जातोऽन्नेनैव वर्धते ।
देहस्सोऽन्नमयो नात्मा प्राक्चोर्ध्वं तदभावतः ॥

पितृभ्यां भुक्तान्नजवीर्यजातेनान्नेनैव वर्धते ।
देहः स्थूलोऽन्नमयो नाम्ना प्राज्ञैः ख्यातः तदभावतः ॥

ஸ்தூலசரீரத்துக்கு அன்னமயகோசமென்று பெயர். மாதாபிதாக்களால் புஜிக்கப்படும் அன்னமானது சுக்லசோணிதரூபமாகப் பரிணமிக்கின்றது. அவ்விருவர்களின் சேர்க்கையால் தேகரூபமாக ஆகின்றது. கோசம்போல் மறைத்துக்கொண்டிருப்பதால் கோசம் என்று சொல்லப்படுகிறது. அன்னத்தினுடைய விகாரமாயிருந்துகொண்டு இச்சரீரமானது ஆத்மஸ்வரூபத்தை மறைக்கின்றது.

சிஷ்;—ஸ்வாமின் வியாபகனான ஆத்மாவைப் பரிச்சின்னனாகவும் ஜன்மாதியான ஆறுபாவவிகாரமில்லாதிருக்கிற ஆத்மாவைஆறு பாவவிகாரமுள்ளவனாகவும் தாபத்திரயரகிதனான ஆத்மாவை தாபத்திரயத்தோடு கூடியவன்போலவும் எப்படி மறைக்கின்றது.

குரு:—கத்திஉறையானது எப்படிக் கத்தியை மறைக்கின்றதோ உமியானது எப்படி அரிசியை மறைக்கின்றதோ ஜராயுவென்கிற தோலானது எப்படி கர்ப்பத்தை மறைக்கின்றதோ அவ்விதம் இந்த அன்னமய கோசமும் ஆத்மஸ்வரூபத்தை மறைக்கின்றது. இது இதற்கு முன்னுமில்லை. இனியும் இருக்கப் போகிறதில்லை. ஆகையால் இது ஆத்மாவல்ல.

(தொடரும்) உப-பத்திராதிபர்

---

## நெரிஞ்சிப்பேட்டையில்

# ஆசார்யேந்திர விஜயம்

(உகூஅ-வது பக்கத்தொடர்ச்சி.)

தவிர காஞ்சியில்யோகலிங்கத்தைஸ்தாபனம்செய்தார் என்ற விஷயத்தை நைஷதம் 12-வது ஸர்க்கத்தில் தமயந்தீ ஸ்வயம்வா மண்டபத்தில் காஞ்சீ மஹாராஜாவைப் பற்றிச்சொல்லி வருமிடத்தில்ஸ்ரீ ஹர்ஷர்என்ற மஹாகவியும்அநுவாதஞ்செய்திருக்கிறார் என்னும் இவ்வாசார்ய பக்தியைச் செய்து ஸத்குரு கிருபாவிசேஷத்

தால் ஐஹிகமான க்ஷேமலாபங்களையடைந்து நித்யநிரதிசயா நந்த பதப்ராப்திக்கும் பாத்ராளாக வேண்டியதென்றும் அனுக்ர ஹித்தார்கள். இத்துடன் உபன்யாஸம் முடிந்தது. இச்சமயம் ஸ்ரீஸ்வாமிகளின் பிரதிபா விசேஷத்தையும் வாக்சாதுர்யத்தையும் கண்டு புகழாதவர்கள் யாருமில்லை.

மருநாள் 14—4—27-ல் பட்டணபிரவேசம் வெகு விமர்சை யாக நடத்தப்பட்டது. நல்ல சந்திரிகையானதால் இக்காக்ஷியைக் காணப்பல ஊர்களிலிருந்தும் 5000 ஜனங்களுக்குமேல் வந்திருந் தார்கள். இக்கிராமத்திற்கு 'தேவராஜபுரம்' என்று பிராசீன நாமதேயமுண்டு சத்ரம், சாமரம், வியஜனம், நாநாவிதமான த்வஜங்கள் மகரதோரணம் முதலான பிருதுகளுடன்நன்ருய் அலங் கரிக்கப்பட்ட தந்த சிபிகையில் ஸ்ரீ ஸ்வாமிகள் பீதாம்பரதாரிக ளாய் நவ்ல ஹாரங்களணிந்து ஆரோகணஞ் செய்துகொண்டு யானை, குதிரை, ஒட்டகம் முதலானபிருதுகளெல்லாம்முன்செல்ல இனிமையான வாத்ய கோஷங்களுடனும் பாண வேடிக்கைகளு டனும் கியாஸ் லைட்களுடனும் ஆயிரக்கணக்கான ஜனங்களுட னும் ஊர்வலம் வந்த சமயந்தான் அந்த நாமதேயம் அந்வர்த்த மாச்சுது.

மருநாள் 15—4—27 சுக்ரவாரமானதால் ராத்திரி விசேஷ மாக ஆராதனங்கள்செய்துபிரஸாதங்கொடுத்தனுக்ரஹித்துவிட்டு 9 மணிக்கு இனியதோர் உபன்யாஸம் செய்தார்கள். அதாவது அலௌகிக சிரேயஸ்ஸாதனமான வேதங்கள் நான்கு, அதற்கு அங்கங்கள் 6, உபாங்கங்கள் 4. இவைகள் எல்லாவற்றையும் தெரிந்தவன்தான் ஸாங்கோபாங்காத்யயனம் செய்தவனுவான் என்றும் அதின் நாமாக்களையும் ப்ரதிபாத்யமான விஷயங்களையும் உட்பிரிவுகளையும் விஸ்தாரமாக எடுத்துச்சொல்லி ஸாங்கோபாங் கமான வேதமானது க்ஞானத்தையும் க்ஞானஸாதனமான கர் மாக்களையுமே போதிக்கிறது. ஆனதால் வைதிக கர்மாக்களை அவ சியம் அனுஷ்டிக்கவேண்டும் எவ்வளவு நெருக்கடியான ஸந்தர்ப் பத்திலும் சிகை, யக்ஞோபவீதம், பஞ்சகச்சநியமம், புண்ட்ரதா ரணம், ஈசுவர ஸந்தர்சனம் முதலியவைகளை விடக்கூடாது. ஸத்ய வசனந்தவராமல் ஸந்தியாவந்தனத்தையாவது காலத்தில் அனுஷ் டித்துவரவேண்டும் இதுவே உத்தமகதிக்கு ஸாதனமாக ஏற்ப

டும். இந்த உபதேசத்தை மரக்கக்கூடாது என்றும் விஸ்தாரமாக உபன்யஸித்தார்கள். இவ்வுபதேசமானது பசுமரத்தாணிபோல் ஜனங்களின் மனதிற்பதிந்து அனுஷ்டானத்திற்கும் வந்துவிட்டது.

இவ்வூரில் ஸர்க்கார் தஸ்திக்குள்ள வேணுகோபாலஸ்வாமி ஆலயமும் ஸ்ரீதர்மசிவாசார்யஸ்வாமிகள் மடத்திற்குச் சொந்தமான விசாலாக்ஷீ ஸமேதரான ஸ்ரீ காசி விசுவநாதேசுவர ஸ்வாமி ஆலயமும் இருக்கின்றன. இம்மூர்த்திகளைத் தரிசிக்க 16—4—27 காலை 9மணிக்கு அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீஸ்வாமிகள் பூர்வம் சிவாலயம் வந்து யதாஸம்பிரதாயமாய் தர்சனஞ்செய்துகொண்டு பிம்ப ஸௌஷ்டவங்களையும் கோவிலின் சில்ப வேலைகளையும் பார்த்து விசேஷசந்தோஷத்துடன் இக்கோவிலுக்கு 2 லக்ஷம் ரூபாய் சிலவாயிருக்குமா? என்று மடம் ஏஜண்டு ஸ்ரீனிவாஸய்யங்காரைக் கேட்டார்கள். அவ்வளவு தொகை வேண்டியிருக்குமென்றும் ஆனால் சமீபத்திலிருக்கும் மலையிலிருந்து கற்கள் எடுத்துக்கொண்டதால் லக்ஷம் ரூபாய் வரையில்தான் ஆச்சுதென்றும்விக்ஞாபித்துக்கொண்டார். இத்தகைய தேவாலயத்தையும் மடாலயத்தையும் நிர்மாணஞ்செய்த ஸ்ரீலக்ஷ்மீநாராயண தர்மசிவாசார்யஸ்வாமிகளுடைய குணாதிசயங்களையும் தீரத்தன்மையையும் புகழ்ந்து பேசிஅவரது நாமதேயத்தையும் திருப்பணிவேலை ஆரம்பித்தகாலத்தையும் முடிந்து கும்பாபிஷேகம் நடந்தகாலத்தையும் கர்பக்ரஹத்துச்சிலையில் எழுதவேண்டுமென்று மடம் ஏஜண்டுக்கு ஆக்ஞாபித்தார்கள். பிறகு வேணுகோபாலஸ்வாமி தர்சனமுஞ்செய்துகொண்டு மடம் வந்து பூஜாதி கார்யங்கள் நடத்தப்பட்டன.

அன்று சாயங்காலம் 5மணிக்கு ஸவாரி புறப்பட்டு பவானி மார்க்கமாக கோபிசெட்டிப்பாளையம் போவதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீஸ்வாமிகளின் ஸந்தர்சனத்துக்காகவும் பலமந்திராக்ஷதை ஸ்வீகாரத்துக்காகவும் ஸகல ஜனங்களும் வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீஸ்வாமிகளை விட்டுப்பிரிவதானது ஜனங்களுக்கு எதிர்பாராத துயரத்தை அளித்து விட்டது. முகம் வாடிவிட்டது. கண்ணீர் ததும்புகிறது. இதை ஸ்ரீஸ்வாமிகள் அறிந்து, உங்கள் பக்தியானது ரொம்ப விசேஷமானது. இவ்வளவு சிரிய கிராமத்தில்

6நாள்வரை நிறுத்திக்கொண்டு பிரதிதினம் பிக்ஷையும் பாதபூஜையும் நடத்தியதற்கு உங்கள் பக்தியேதான் முக்ய காரணம் விஸ்தாரமாயும் விசேஷ ஸௌகர்யத்துடன் கூடினதாயுமுள்ள இம்மடலாயமும், அதிஸமீபத்திலிருக்கிற காவேரி மஹாநதியும், உங்கள் பக்தி புரஸ்ஸரமான கைங்கர்யங்களும், எனக்குங்கூட இவ்வூர் வாஸத்தில் பிரியத்தை உண்டுபண்ணி விட்டது. இப்படித்தான் ஒவ்வொரு கிராமங்களிலேயும் தங்கிப்புறப்பட வேண்டியிருக்கிறது. விசேஷ ஸந்தர்பங்களில் பத்திரிகை அனுப்பச் செய்கிறேன் வந்து தர்சித்துக்கொள்ளலாம் என்றுசொன்னார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளின் வாத்ஸல்ய புரஸ்ஸரமான வார்த்தைகளைக்கேட்டதும் ஆனந்த பரவசாளாகிவிட்டார்கள். உடனே பல மந்திராக்ஷதை ப்ரஸாதங்கள் கொடுத்து அனுக்ரஹித்துவிட்டு5மணிக்கு புறப்பட்டு இவ்வூருக்கு ஸமீபத்தில் ராஜாக்களால் கட்டப்பட்டு தற்காலம் சிதிலமாய்ப் போயிருக்கிற அணையையும் வாய்க்காலையும் பார்த்துவிட்டு அவ்விடமே அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு $6\frac{1}{2}$ மணிக்குப்புறப்பட்டு பவானி மார்கமாகக் கோபிசெட்டி பாளயத்துக்கு விஜயமானார்கள்.

*N. K.* வெங்கடரமண சாஸ்திரிகள்,
தர்மசிவாசார்ய ஸ்வாமிகள்மடம்,
ரெரிஞ்சிப்பேட்டை

---

# ஸ்மிருதி செய்தவர்களின் ஆராய்ச்சி.

400 வருடம் கிருதயுகமனிதர்களிக்கு ஆயுஸ் கிடைத்ததன ஹேதுவை முதலிலேயே இந்த சுலோகத்தில் மனுகூறிவிட்டனர் அதாவது ரோகமற்றவர்கள் மனதில்நினைக்கும் கார்யஸித்தியைப் பெற்றவர்கள்என்று இதுயுகபுருஷனின் அனுக்கிரகத்தால்மனிதர்களுக்குக் கிடைக்கிறதோ அல்லது அம்மனிதர்களின் தவமகிமையால் கிடைக்கிறதோ அல்லது இரண்டும் சேர்வதாலோ எதுவாயினும் இருக்கட்டும். அவ்விதமே ஒவ்வோர்யுகத்தில் 100 வயது குறைகிறதென்றால் அப்போது ரோகமும் எண்ணியது கிட்டாததும் அதிகமாகிறதென்றாயிற்று. ஆகவே இக்கலியில் ஏற்பட்ட

100 வயதுக்கும் இன்னும் குறைவேற்படுவதையும் இன்னும் குறைந்துகொண்டே போகுமென்பதற்கும் காரணமானரோக விருத்தி புதிதுபுதிதாய் நேர்ந்துகொண்டே இருக்கலாமென்பதையும் நாம் ஊகித்தறிய வழி ஏற்படுகிறது. இத்தகைய கலியில் கிருதயுகதர்மம் செய்யஇயலாதென்பதை நம்மகரிஷிகள் கண்டறிந்தே தர்மங்களைக் கூறியிருக்கின்றனர் அதைமேற்போய்க்கொண்டே நாமறியலாம் இங்கு இவ்வாசங்கையைக் கிளப்பிச் சமாதானம் பெறுவோம். புராணங்களிலும் இதிகாஸங்களிலும் அநேக 1000 வருடம் மகரிஷிகளும் அரசர்களும் ஜீவித்திருந்ததாய்க்கூறுவது எவ்விதமென்பதே.இதற்குச் சமாதானம் முன்னமேயே கூறிவிட்டேன். ஆயினும் பிரமாணவாயிலாகவும் கூறுகின்றேன்.

यावद्यावदभूच्छ्रद्धा देहं धारयितुं नृणाम् ।
तावत्तावदजीवंस्ते नासीद्यमकृतं भयम् ॥
वेदोक्तमायुर्मर्त्यानामाशिषश्चैव कर्मणाम् ।
भवन्त्यनुयुगं लोके प्रभावश्च शरीरिणाम् ॥

யாவத்யாவதபூச்ச்ரத்தா தேஹம் தாரயிதும் ந்ருணாம் ।
தாவத்தாவதஜீவம்ஸ்தே நாஸீத்யமக்ருதம் பயம் ॥
வேதோக்தமாயுர்மர்த்யாநாமாஶிஷஶ்சைவ கர்மணாம் ।
பவந்த்யநுயுகம் லோகே ப்ரபாவஶ்ச ஶரீரிணாம் ॥

மானிடர்களுக்குத் தேகத்தைக் காப்பாற்றுவதற்கு எவ்வளவுக்கெவ்வளவு சிறத்தை ஏற்பட்டதோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் ஜீவித்துவந்தார்கள். அவர்களுக்கு யமபயமே இல்லை மனிதர்களுக்கு வேதத்திற்கூறப்பெற்ற ஆயுளும் கன்மங்களின் பலன்களும் நிக்ரகானுக்ரக சக்தியும் யுகத்திற்குத்தக்கவாறு ஏற்படும் என்கிறார். இங்குதேகத்தில் சிரத்தை எவ்வளவுக்கெவ்வளவு ஏற்பட்டிருந்ததோ அவ்வளவுக்கவ்வளவு பிழைத்திருந்தார்கள். என்றால் நமக்கு தேகத்தில்சிரத்தையில்லையா நாம் சாகத்துணிந்திருக்கிறோமா அவ்விதமாயின் நாம் தேகம் அனித்யமென்றஞானத்தையடைந்த சிரேஷ்டர்களாயிற்றே என்றால் இல்லைநமக்குப் பிழைக்கவேண்டும் ஒருநாளும் சாகக்கூடாதென்ற எண்ணம்மட்டிலுமிருக்கிறதே யொழிய அதற்குச்சொன்ன ஸாதநத்தை நாம்

கொஞ்சமும் செய்ய முன்வருவதேஇல்லை. இதற்கு முக்கியமான ஸாதனம் தர்மசாஸ்திரங்களிற் கூறியவாறு உபவாஸம் முதலிய தால் தேகத்தைவற்றச் செய்வது சாஸ்த்ரத்திற் கூறப்பெற்றுள்ள ஆகாரத்தை சாஸ்திரத்திற்கூறியவாறு புசித்தல் பிர்மசர்ய ஆசிரமத்தை சாஸ்திரப்படி அனுஷ்டித்தல் ஆசமனசுத்தி பிராணுயாமஸித்தி முதலியன பயிலுதல் காமதத்தை சாஸ்திரப்படி அனுஷ்டித்தல் முதலியனவே. இதில் நமக்கு எந்தஸித்தி இருக்கிறது. உபவாஸத்தை அனுஷ்டிக்கிறோமோ ஆகாரசுத்தி, உண்டோ சித்தசுத்தி உண்டோ.

अभक्ष्यस्य निवृत्या तु विशुद्धं हृदयं भवेत् ।
आहारशुद्धौ चित्तस्य विशुद्धिर्भवति स्वतः ॥
अभक्ष्यभक्षणाच्चित्तमशुद्धं भवति स्वतः ।
तस्मादभक्ष्यं यत्नेन दूरतः परिवर्जयेत् ॥

𑌅𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌯𑌾 𑌤𑍁 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌆𑌹𑌾𑌰𑌶𑍁𑌦𑍍𑌧𑍌 𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌸𑍍𑌵𑌤𑌃 ॥
𑌅𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌭𑌕𑍍𑌷𑌣𑌾𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌸𑍍𑌵𑌤𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌦𑍂𑌰𑌤𑌃 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ॥

சாப்பிடத்தகாததென்பதை விலக்குவதால் இருதயம் சுத்தமாகும் ஆகாரசுத்தியேற்பட்டால் ஹிருதயம் தானாய் சுத்தமாகும். அபக்ஷ்யத்தைசாப்பிட்டால் இருதயம் தானாய் அசுத்தமாய் விடும். ஆகையால்முயற்சியோடுசாப்பிடத்தகாதென்பதைத்தூரத்தில் விலக்கிவிடவேண்டுமென்கிறார். தானாய் சுத்தமாகுமென்றும் தானாய் அசுத்தமாகுமென்றும் சொன்னதனால் பக்ஷ்யாபக்ஷ்யங்களை மட்டும் கவனித்து உபயோகித்தால் இருதயம் ஸத்வகுணமுள்ளதாய் ஆவதற்கு வேறுமுயற்சி தேடவேண்டாமென்று கூறப்பெற்றதாய் ஆயிற்று. ஆகவே இவ்விதம்நாம்செய்கிறோமோ ஒருவழியையும் காணோம் அவைகளின்பலன்மட்டிலும் எவ்விதம் கிட்டுமோ தெரியவில்லை இதை உத்தேசித்தே ஓர் ஞானி.

क्षान्तं न क्षमया गृहोचितसुखं त्यक्तं न सन्तोषतः
सोढा दुस्सहशीतवाततपनक्लेशा न तप्तं तपः ।

ध्यातं वित्तमहर्निशं नियमितप्राणैर्न शम्भोः पदं
तत्तत्कर्म कृतं यदेव मुनिभिस्तैस्तैः फलैर्वञ्चिताः ॥

க்ஷாந்தம் நக்ஷமயா க்ருஹோசிதஸுகம் த்யக்தம் நஸந்தோஷத:
ஸோடா து:ஸஹஶீதவாததபநக்லேஶா ந தப்தம் தப: ।
த்யாதம் வித்தமஹர்நிஶம் நியமிதப்ராணைர்நஶம்போ: பதம்
தத்தத்கர்ம க்ருதம் யதேவ முநிபிஸ்தைஸ்தை: பலைர்வஞ்சிதா: ॥

பொறுமையை அடைந்து கிருகசுகங்களை விட்டுக்குளிர் வெய்யிலை சகித்துக்கொண்டு தியானமும் செய்தேன். ஆனால் இதற்கு எந்தப் பலனை முனிவர்கள் அடைந்தார்களோ அந்தப்பலன்மட்டிலும் எனக்குக்கிடைக்கவில்லை என்றார். கருத்தென்னவென்றால் பொறுமை முதலியவைகளை எவ்விதம் அனுஷ்டிக்கவேண்டுமோ அவ்விதமனுஷ்டிக்கவில்லை யென்பதே. ஆகவே தேகத்தில் அபிமானம் நமக்கில்லை. அதனால் நாம் ஞானிகளுமல்ல. கேவலம் சோம்பேறிகளான நாஸ்திகர்கள். இத்தகைய யுகங்களின் ஸ்வரூபத்திற்குத் தக்கபடி தர்மங்களேற்படவேண்டிய அவசியத்தைக் குறித்தே தீர்க்க தரிசிகளே ஏற்பாடு செய்திருக்கிறார்கள், ஆதல்பற்றியே

तपः परं कृतयुगे त्रेतायां ज्ञानमुच्यते ।
द्वापरे यज्ञमेवाहुर्दानमेव कलौ युगे ॥

தப: பரம் க்ருதயுகே த்ரேதாயாம் ஜ்ஞாநமுச்யதே ।
த்வாபரே யஜ்ஞமேவாஹுர்தாநமேவ கலௌ யுகே ॥

கிருதயுகத்தில் தபஸ் திரேதாயுகத்தில் ஞானம் த்வாபரத்தில் யக்ஞம் கலியுகத்தில் தானம் என்றார். இதனால் அந்தந்த யுகத்தில் அததுதான் தர்மமென்பது அல்ல. அந்தந்த யுகத்திற்கு அதது பிரதானம். மற்றவை சக்தியுள்ளமட்டும் அனுஷ்டிக்கத்தக்கவை என்று பொருள். ஆதல்பற்றியே நம் முன்னோர்கள் அக்காலத்தில் மகரிஷிகளாய் தேகத்தை மறந்து தவம்புரிந்தனரென்கிறோம். அத்தகைய தவம்புரிவோர் இக்காலத்திலெத்துணை பெயர் இப்போது நம்மைத் தவம் செய்யக்கூடாதென்று தடுத்தவர் யாரேனுமுளரோ? ஆகவே இந்த யுகத்திற்கு அது ஸாத்தியமில்லை. தானம் என்பதை முக்கியமாய் வைத்துக்கொண்டால் முன் யுகத்தில் தவத்தினாலாயபயனை இதனால் அடையலாமென்றாயிற்று.

இதை அனுஸரித்தே கிருதயுகத்திற்கு மனு தர்மசாஸ்திரம் த்ரே தாயுகத்திற்கு கௌதமஸ்மிருதி. த்வாபரத்தில் சங்கலிகிதஸ்மி ருதி கலியுகத்திற்கு பராசரஸ்மிருதி என்றவிடத்தும் அர்த்தம் கொள்ளவேண்டும். மற்றும் யுகத்தின் மகிமையால் பல மாறுத லுண்டென்பதற்கு இதை கவனியுங்கள்.

(இன்னும் வரும்.)

M. N. சுப்பிரமண்ய சாஸ்திரி.

---

# மோக்ஷாதிகாரிகள்.

இப்பிறவிக்கடலானது ஸுகம், துக்கம், விருப்பம், வெறு ப்பு, பொய், மெய், சீதம், உஷ்ணம், பகல், இரவு, தர்மம், அதர் மம் இவைகள்போன்ற அநேக த்வந்த்வ (இரட்டை) ங்களுடன் கூடியே இருக்கிறது. இவைகளில் நமக்கனுகூலமாகத்தோன்று வதும் முடிவில் துக்கத்தையே கொடுக்கின்றன. அதாவது சுகத் தைப்பார்ப்போம். ஓர் ஸுகம் உண்டாவதற்கு முதலில் கஷ்ட த்தையே அனுபவிக்கிறோம். பிறகு சுகமுண்டாகிறது. அதா வது முன் அனுபவித்த கஷ்டநிவிருத்தியேதான் சுகம், இதுவும் சில நாழிகைஇருந்துமற்றொருதுக்கம்பலமாய்த்தோன்றும்போது ஓடிவிடுகிறது. நாம் சில நிமிஷங்கள் சுகப்பட்டுக்கொண்டிருந் தபோது நம் மனக்குதிரை திமிர்கொண்டு காடுமேடெல்லாஞ் சுற்றி மலைகள்மேலேறி ஆறுகளைத்தாண்டி தனக்கு நிகறற்றதாக ஸஞ்சரிக்கையில் ஓர் வேங்கையைக்கண்டு பயந்து ஓடக் கால் முறிந்து கடைசியில் தளர்வுற்று ஓய்ந்துவிடுகிறது. விருப்பமும் தனக்கு ஓர் எல்லையை ஏற்படுத்தாமல் பரவி வெறுப்புற்று ஓய் கிறது. இம்மாதிரியே ஒவ்வொன்றும் மனிதனைத்தொல்லைக்குள் ளாக்கி தன் ஸ்வரூபத்தையும் தன் கடமையையும் மறக்கச்செய் து மேன்மேலும் ஜன்மஹேதுவாயும் க்லேசசாதனமாயும் ஆகின் றது. ஆகையால் இக்கடலினின்றும் கரையேறி மறுபடியும் இறங்காமல் இருப்பதற்கு என்ன செய்யலாம் என்று விவேகிகள் ஆராய முன்வரவேண்டியது அவச்யமன்றோ?

ஆமாம், அவச்யம் அவச்யம். ஆனால் இவ்விதம் செய்யலாம். அதாவது நமக்கு இந்த சரீரமானது முன் ஜன்மங்களில் செய்த தர்மத்தால் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஜன்மத்திலிருந்து மறு ஜன்மம் ஏற்படாதிருக்க, பலத்தையளிக்கக்கூடிய காம்யகர்மங்களையாவது, நரகாதிகளைக்கொடுக்கக்கூடிய நிஷித்தகர்மங்களையாவது செய்யாதிருப்போம். எந்த நித்யமான கர்மங்களை விட்டால் பாபம் ஏற்படுமோ அவைகளைச் செய்துவருவோம். சரீர நாசத்துடன் சரீரஉற்பத்திக்குக்காரணமான பிராரப்தமும் அதன் அனுபவமும் ஒழியப்பிறகு, பிறப்பில்லாமல் முக்தியை அடைந்துவிடலாமே என்றால் அதுதான் முடியாது. ஸஞ்சித கர்மங்கள் அநேகங்களிருப்பதால் அவ்வளவும் சேர்ந்து ஒரு சரீரத்தைக் கொடுக்கிறதென்கிற பிரமாணமில்லாமையால் ஸ்வர்க்காதி சுகத்தையும் நரகாதி அனுபவத்தையும் ஒரே ஜன்மத்தில் அனுபவிக்க முடியாதாகையால் அநேக ஜன்மங்கள் எடுத்தே தீரவேண்டும். அந்தந்த ஜன்மங்களிலும் இவன் இஷ்டமில்லாமலிருந்தாலும் முன் கன்மவாஸனையினால் புண்ய பாப பலப்பிரதானமான பல கன்மாக்களைச் செய்ய ஏற்படுகிறது. இவ்வளவு தொல்லைக்கு ஆளாக்குகிற இந்த ஸம்ஸாரத்திலிருந்தும் ஓடிவிடுவோம் என்று நெருப்புச்சூழ்ந்த வீட்டினுள்ளிருப்பவன் வேறொரு பொருளையும், அருமையான தன் மகனையும் கவனியாது எப்படி வெளியில் புறப்படுவனோ அம்மாதிரியான நிலைமையில்இருப்பவர்களே முமுக்ஷுக்கள் விடுதலையடைய விரும்புவோர்கள். இவர்களே உத்தமாதிகாரிகள். இவர்களுக்குக் குருவினுடைய உபதேசத்தால் உடனே அக்ஞானநிவிருத்தியேற்பட்டு பிர்ம்மஸாக்ஷாத்காரம் ஏற்படுகின்றது. திருஷ்டாந்தமாக நசிகேதஸ் யமனிடத்திலும் ச்வேதகேது தன் தகப்பனான உத்தாலகரிடத்திலும், வாமதேவர் கர்ப்பத்திலேயும் சுகப்பிர்மத்திற்கு உபநயனமாவதற்கு முந்தியும் பிருகுவுக்கு வருணனிடத்திலும் உபதேசத்தால் முக்தியேற்பட்டிருப்பதாக வேதத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

நாமெல்லோரும் மந்தமதிகளாயிற்றே நமக்கு இருக்கும் அக்ஞானத்தை நீக்க எவர் சக்தராவர்? காலமோ ஜீவர்களை பஹிர்முகமாக்குவதில் (வெளித்தோற்றத்தில் பிரீதியுடனிருத்தல்) கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறதே என் செய்வோம்?

எங்கு செல்வோம் என்று தபிக்கும் ஜீவன்களிடத்தில் கருணை யால் மகர்ஷிகள் சாஸ்திரத்தை இரண்டாய்ப்பிரித்து ஐஹிக க்ஷேமத்திற்கென்றும் பரமபுருஷார்த்தமெனும் வீட்டையடை வதற்கென்றும் நிலைநிறுத்தினர். அவற்றுள் முதலாவது சில்பம், சிகித்ஸாமுறை, ராஜதர்மம், ஸங்கீதசாஸ்திரம், பயிற் தொழில், வியாபாரம் இவைகள்போன்றவை— இரண்டாவது தர்சனரூப மாயுள்ளது அகக்கண்ணால் பார்க்கக்கூடியது. இதை கபிலர், கணாதர், கோதமர், பதஞ்சலி, ஜைமினி, வேதவ்யாஸர் என்ற ஆறு மகர்ஷிகளும் வேதார்த்தத்தை விசாரித்து அந்தந்த அதி காரிகளுக்குத் தகுந்தபடிக்கும் முடிவில் ஒரே அர்த்தத்தில் சேர் க்கையாகும்படிக்கும் இயற்றினர். ஆகைபாற்றான் வேதங்களையும் பூர்வாசார்யர்கள், மந்தாதிகாரிகள் மத்யமாதிகாரிகள் உத்தமாதி காரிகள் விஷயத்தில் முறையேகர்மகாண்டம்,உபாஸனாகாண்டம், ஞானகாண்டம் என்று மூன்று பிரிவாய் வகுத்தனர். இவர்களில் மிகக்கருணையுள்ள ஜைமினிமகரிஷியானவர் வேதார்த்தத்தை மந் தாதிகாரிகளையுத்தேசித்து பூர்வமீமாம்ஸைஎன்று பனிரண்டு அத் தியாயமாய் இயற்றி வேதம் முழுமையும் கார்ய (கிரியா) ரூபமா யுள்ளது. அப்படிக்கில்லாமல் ஸித்தமான ஓர் வஸ்துவைக் கூறுவ தாயின் பயனற்றதாக ஆகிறது. ஆகையால் ஜோதிஷ்டோமம், ராஜஸூயம் முதலானவைகள்போன்ற கர்மாக்களை செய்துவரு வதே மோக்ஷஸாதனம் என்று சொல்லியிருக்கிறார். இவைகளெல் லாம் அநித்யசுகத்தை விரும்புகிறவனும் வர்ணாச்ரமங்களில் அபி மானமும்ராகத்வேஷங்களால் கட்டுண்டமனமும் தன் ஆத்மாவில் சிரத்தைமாத்திரம் உள்ளவனுன (ஸ்வர்க்கத்தில் இதே ஆத்மா வேறுசரீரத்துடன் போகமனுபவித்தல்என்பதே சிரத்தை) காமு கனையே குறித்துச் சொல்லியதாயிற்று. இவர்களையுத்தேசித்தே பகவான்கீதையில்,

**न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसङ्गिनाम् ।**

ந புத்திபேதம் ஜநயேதஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம் ।

என்று சொன்னது உண்மையில் ஞானிக்குக் கர்மாக்களில்பற்றுத லில்லாமையே கூறியதாகிறது. பூர்வமீமாம்ஸையைப் பற்றிய வரையில் பலமில்லாத கர்மாவும் பலத்தின் அனுபவத்தில் விருப்

பமில்லாவிடினும் அக்கர்மாக்களைக் கைவிடக்கூடிய அதிகாரியும் கிடையாது. அக்ஞானிகள் அதிகமானபடியால் அவர்களும் காலக்கிரமத்தில் பாபத்தைப்போக்கி ஞானிகளாகவேண்டி வேதத்தில் கர்மகாண்டபாகம் அதிகமாயிருக்கிறது. கர்மகாண்டானுஷ்டானம் செய்து அதையே முக்கியமாயெண்ணியிருப்பவர் மந்தாதிகாரிகள். மனுஷ்யவர்க்கத்தில் முக்திக்காக முதற்படியிலிருப்பவர்கள். இரண்டாவது மத்யமாதிகாரிகள்—

வித்வான்களுக்குப் பூர்வமீமாம்ஸையில் கூறியவைகளில் அதிகாரமில்லை. அக்ஞானிகளுக்கேயுள்ளது என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் பரமப்பிரியனான அர்ஜுனனை நிமித்தமாகக்கொண்டு

यामिमां पुष्पितां वाचं प्रवदन्त्यविपश्चितः ।
+ + + +
व्यवसायात्मिका बुद्धिः समाधौ न विधीयते ॥

யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவதந்த்யவிபஶ்சித: ।
+ + + +
வ்யவஸாயாத்மிகா புத்தி: ஸமாதௌ ந விதீயதே ॥

வேதார்த்தவாதங்களில் ஆஸக்தியுடைய அவிவேகிகள் ஸ்வர்க்க பலத்தைக்காட்டிலும் வேறில்லை என்று சொல்லும் வேதவாக்கியத்தை நம்புகிறார்கள். கோரிக்கையுடைய மனத்தோர் ஸ்வர்க்க பலத்தையே உத்தம பலமாக எண்ணிப் பின்னர் ஜன்மத்தையே கர்மபலமாக நிச்சயித்து சுகாநந்தப் பிராப்தியைக் குறித்து விசேஷமாகச் சொல்லப்படும் வேதவாக்கியங்களையே பிரமாணமாய் சொல்லுவார்கள். மேற்கூறிய போக ஐச்வர்யங்களில் பற்றுதலுள்ளவர்களுக்கு ஞானத்தில் ஸ்திரபுத்தி ஒருபோதுமுண்டாகாது. மேலும்

कुर्वते कर्मभोगाय कर्म कर्तुञ्च भुञ्जते ।
नद्यां कीटा इवावर्ता दावर्तान्तरमाशु ते ॥
व्रजन्तो जन्मनो जन्म लभन्ते नैव निर्वृतिम् ॥

குர்வதே கர்ம போ⁴கா³ய கர்ம கர்தும் ச பு⁴ஞ்ஜதே ।
நத்³யாம் கீடா இவாவர்தா தா³வர்தாந்தரமாஶு தே ॥
வ்ரஜந்தோ ஜந்மநோ ஜந்ம லப⁴ந்தே நைவ நிர்வ்ருதிம் ॥

விவேகசூன்யர்கள் போகத்துக்காகக் கர்மாக்களை செய்கிறார்கள். கர்மாக்களைச் செய்யவே ஜீவித்திருப்பதாக நினைக்கிறார்கள். ஆற்றில் சுழலில் அகப்பட்ட புழுவானது மற்றோர் சுழலில் விழுவது போல் ஓர் ஜன்மத்திலிருந்து மறுஜன்மத்தையடைகிறார்கள். ஒருகாலும நித்யஸுகத்தையடைகிறதில்லை என்று பெரியோர் மொழியினாலும், வெறுப்பு விருப்பங்களான த்வந்த்வமோகத்தால் ஜன்மகாலத்தில் எல்லாப்பிராணிகளும் அவிவேகமடைகிறார்கள். அவர்களுக்கு புண்யகர்மங்களால் பாபநாசம் ஏற்பட்ட பிறகு என்னை பஜிக்கிறார்கள் என்று கீதையில் கிருஷ்ணபகவான் கூறிய படியும், ஈச்வர அனுக்கிரகத்தினாலாவது, ஜன்மாந்தரங்களில் செய்த பாபகர்மாக்களின் நாசத்தினாலாவது, பெரும்புண்யத்தின் பயனாலாவது ஒருகால் அநேக ஜன்மங்களுக்குப்பிறகு த்வந்த்வ மோஹம் நாசமடைய பகவானிடத்தில பக்தி யேற்படுகிறது. இவர்கள் தான் அரைவிழி விழித்தவர்கள். மத்யமாதிகாரிகள் இவர்கள வேதத்தின் ஏகதேசமாயுள்ள உபாஸனாவிதிகளை முக்கியமாகக்கொண்டு அபிமத தேவதைகளையுபாஸிக்கின்றனர். இவ்வித மத்யமாதிகாரிகளை யுத்தேசித்துத்தான் கபிலகணாதகோதம பதஞ்சலிமகர்ஷிகள் சாஸ்திரங்களியற்றினர். ஸ்ரீகிருஷ்ணபகவானும் கீதோபதேச முடிவில் அர்ஜுனனையும் மத்யமாதிகாரியாகவே எண்ணி

सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ॥

ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம்த்வாஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஶுச: ॥

என்று பரம கௌரவ வாக்கினால் தன்னையே எல்லாதர்மத்தையும் விட்டு உபாஸிக்கச் சொன்னார் ஆங்காங்கும்.

इमं राजर्षयो विदुः ।
राजविद्या राजगुह्यं भक्ता राजर्षयस्तथा ॥

இமம் ராஜர்ஷயோ விது: ।
ராஜவித்யா ராஜகுஹ்யம் பக்தா ராஜர்ஷயஸ்ததா ॥

என்று ராஜவித்யா சப்தத்தால் விளக்கியுள்ளார். பிர்ம்மவித்யா என்று சொல்லவில்லை. பெரிய அறிவாளிகளால் விஸ்தரிக்கவேண்டிய இவ்விஷயத்லை எழுதப்புகுந்த நான் மெள்ள மெள்ள எவ்விதமாயினும் முடிக்கவேண்டிக் கடைசியாக, கர்மத்தையே பிரதானமாகக் கொண்டவர்கள் மந்தாதிகாரிகள் பக்தி அல்லது உபாஸனையைக் கைக்கொண்டவர்கள் மத்யமாதிகாரிகள் ஆத்மக்ஞானமுள்ளோர் உத்தமாதிகாரிகள் என்றும் கூறி முந்திய இரண்டு அதிகாரிகளும் பரம்பரையாக முக்தியடைவர் என்றும் உத்தமாதிகாரிகள் நேராகவே பகவானுடைய திருமேனியில் இரண்டறக்கலப்பவரென்றும் தெரிகின்றது.

மேற்கண்ட உத்தமாதிகாரிகளுக்கு ஸத்யவதீ ஸூதனன வேதவ்யாஸர் உத்தர மீமாம்ஸை என்று நான்கு அத்யாயம் கொண்ட பிர்ம்ம ஸூத்திரங்களை இயற்றினர். அம்மகர்ஷியை அக்காலத்திலேயே அதற்கு பாஷ்யமெழுதும்படி வேண்டியும் தன்னுல் அநேக வேதபாடு பாடுகளும், பாஷ்யங்களும் சாஸ்திரங்களும் இயற்றியிருந்தாலும் பிர்ம்மஸ்வரூபத்தை வெளியிட பாபபிர்ம்மமேதோன்றியாகவேண்டுமேயல்லாது தம்மால்முடியாதென்றும் பரமேச்வரனே இப்புவியில் அவதரித்து பாஷ்யம் இயற்றப்போவதாயும் செப்பினர்.

அதன்படியே ஸ்ரீபரமேச்வரன் ஸ்ரீசங்கர பகவத் பாதாசார்யாளாய் தோன்றி பிர்ம்மஸூத்திர பாஷ்யமும், மற்றும் உபநிஷத்தில் பனிரண்டும், ஸ்மிருதியில் இருபத்திமூன்று அத்தியாயங்களுக்கும், பாஷ்யமும் எழுதியனுக்கிரகித்தனர்.

ஆகையால் ஆசார்யாள் பாஷ்யத்தில் ஓர் பங்க்தியேனும் பாராயணம் செய்யப்புகுந்தவர் பாக்கியசாலிகளே என்று கூறவும் வேண்டுமோ? இவ்வித அத்வைத வித்தையைப்பிரசாரம் செய்ய வேண்டியே ஆங்காங்கு நமது காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள் திக்விஜய யாத்திரை வியாஜமாக விஜயம் செய்துகொண்டு வருகிறார்கள் என்பது திண்ணம்.

வீ. உமாமகேச்வர சாஸ்திரி.
காட்டுமன்னார்கோவில்.